# நிதி நிலை அறிக்கை
# 1997 - 98

முதலமைச்சர்

## திரு. மு. கருணாநிதி

அவர்கள் ஆற்றிய உரை

*மாசி 22, திருவள்ளுவர் ஆண்டு 2028*
*1997ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5ஆம் நாள்*

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 1997-98ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன்வைத்து 1997ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5ஆம் நாளன்று ஆற்றும் உரை:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. சென்ற ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் இந்த அவை முன் வைத்து உரை ஆற்றியபோது

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து"

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த, கரடு முரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவது போல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றி கிட்டும் என்கிற திடசித்தமுடன் இந்த அரசு செயல்படுவதாகக் குறிப்பிட்டிருந்தேன். கடந்த பத்து திங்களில், மேற்கூறியவாறு செயல்பட்டு, இருமுறை பெரு மழை, பெருகி வந்த வெள்ளம் மற்றும் பல பகுதிகளில் வறட்சி நிலை ஆகியவற்றிற்கும் ஈடுகொடுத்து, இதற்கிடையே ஒரே கட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் முழுமைக்குமான தேர்தல்கள், தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆகியவற்றையும் வெற்றிகரமாக நடத்தி மக்களுடைய நல்வாழ்வுக்கும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குமான பல திட்டங்களைத் துவக்கி இந்த அரசு அரும்பணி ஆற்றி வருகிறது. இந்தப் பயணத்தில் மேலும் விரைவாகச் செல்லும் வகையில் அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, மக்களின் நல்வாழ்வுக்காக தொடர்ந்து செயல்படுவோம் என்ற உறுதியுடன், 1996–97ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1997–98ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்த அவை முன் வைக்கிறேன்.

## மத்திய - மாநில உறவுகள்

2. அனைத்து மாநிலங்களின் குழுவை (Inter-State Council) அமைக்க அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த போதிலும், முதல்முறையாக தேசிய முன்னணி அரசுக்குப் பிறகு, 1996ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசுதான் இந்தக் குழுவின் இரண்டாம் கூட்டத்தைக் கூட்டியது. 15.10.1996 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையை நிறைவேற்றிட சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகள் போதுமானவையாக இல்லை என்றும், இப்பரிந்துரைகளை மீண்டும் பரிசீலித்து மேம்படுத்த இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளேன்.

3. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கை குறித்துப் பரிசீலிப்பதற்காக, இந்தியப் பிரதமர் தலைமையில், மாநில முதல்வர்கள் பங்கேற்ற தேசிய வளர்ச்சிக் குழு 16.1.1997 அன்று கூடியபோது, உத்தேசிக்கப்பட்டுள்ள உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆண்டுக்கு சராசரி ஏழு சதவீதம் என்பதை வரவேற்று, அதற்கேற்ப மைய அரசு, மாநிலங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்களை வழங்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்தியுள்ளேன். ஒன்பதாம் திட்டக்காலத்தில், மைய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிதியுதவியில் மானியத்தின் அளவை 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று எடுத்துரைத்தேன்.

4. மைய-மாநில அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளத்தக்க தொகுப்பில் மைய அரசு விதிக்கும் வரிகள் அனைத்தையும் சேர்க்க வேண்டுமென்ற பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை விரைந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் வலியுறுத்தியதை மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஏற்று அறிவித்துள்ளது மாநில உரிமைகளை மைய அரசு மதிப்பதற்கான துவக்கம் என்ற அளவில் வரவேற்கிறேன்.

## உள்ளாட்சி மன்றங்கள்

5. உள்ளாட்சி மன்றங்களுக்கு படிப்படியாக அதிக பொறுப்புகளையும், அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் வழங்க இந்த அரசு முன்வந்துள்ளது.

6. ஏற்கனவே தமிழகத்தில் இருந்த முறைப்படி, கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவல் முறையிலான உறுப்பினர்களாக இருக்கும் வகையிலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையிலும் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று மைய அரசை இந்த அரசு கேட்டுக் கொள்ளும்.

7. மாவட்ட ஊராட்சி மன்றங்கள் ஊரகப் பகுதிகளில் அரசுத் துறைகளின் வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடு பற்றி விவாதித்து, அவற்றின் மேம்பாட்டுக்கு தக்க பரிந்துரைகள் அளிக்கும். மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, உரிய பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யும்.

8. தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் கீழ் கிராம ஊராட்சிகள் நிலையிலும், ஊராட்சி ஒன்றியங்கள் நிலையிலும் ஆற்ற வேண்டிய கட்டாயமான பணிகளைப் (Mandatory functions) பொறுத்தவரையில், ஊராட்சித் தலைவரை நிருவாக அதிகாரியாக அறிவிப்பதற்கும், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகளைப் பராமரித்தல், பொது சுகாதாரம், தூய்மை ஆகியவற்றைப் பேணுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் பணியாளர்களையும் அளிப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சிறு பாசன ஏரிகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு போன்ற முக்கியப் பணிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்புக்கு உட்பட்டவையாகும்.

9. மேலும் கூடுதல் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்து மாநில திட்டக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர்

*வழங்கல், பொது விநியோக முறை, சாலைகளும் தகவல் தொடர்பும், கதர் தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி, நூலகங்கள், ஊரக மின் வசதி, நவீன எரிசக்தி ஆதாரங்கள் ஆகிய முக்கியத் துறைகளில் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பிக்க முடிவு செய்துள்ளது. இத்துடன் கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை மேற்பார்வையிடும் பொறுப்பை கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.*

**10.** **உள்ளாட்சி அமைப்புகளே அவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் குறித்த முடிவுகளை எடுக்கும் என்றும், அதிகாரிகள் அம்முடிவுகளைச் செயற்படுத்தும் பொறுப்பை மட்டுமே வகிப்பார்கள் என்றும் நான் திட்டவட்டமாக அறிவிக்கிறேன்.**

*11. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதலாக நிதி அளித்திட மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்து அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது :-*

**i)** **மொத்த கேளிக்கை வரியில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த, 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான பங்கீட்டை, 1997-98ம் ஆண்டு முதல், 90 சதவீதம் என உயர்த்தி அளிக்கப்படும்.**

**ii)** **நமது மாநிலத்தில் முதல் தடவையாக, கேளிக்கை வரி நீங்கலாக அனைத்து வரி வருவாயில் 8 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும்.**

*iii) இந்த 8 சதவீத நிதி ஒதுக்கீடு சில வரைமுறைகளுக்குட்பட்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்தளிக்கப்படும். இவ்வாறு பிரித்தளிக்கும் முறையை செயல்படுத்துவதனால் உள்ளாட்சி அமைப்புகளிடையே ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை ஓரளவு சரி செய்ய ஊக்க மானியங்களைத் தொடர்ந்து அளிப்பதற்காக, இந்த எட்டு சதவீத ஒதுக்கீட்டுத் தொகையில் 15 சதவீதம் ஊக்கம் மற்றும் சமன்பாட்டு நிதி*

என்ற தலைப்பில் வைக்கப்பட்டு அதில் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் நகர உள்ளாட்சி மன்றங்களுக்கு 40 சதவீதமும் பகிர்ந்து அளிக்கப்படும்.

iv) எட்டு சதவீத நிதி ஒதுக்கீட்டில், மீதமுள்ள தொகையை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 55 சதவீதமும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 45 சதவீதமும் அளிக்கப்படும்.

12. இவற்றின் வாயிலாக இந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் கணக்கில் அளிக்கும் மானியம் ரூ.646 கோடியிலிருந்து 1997-98ல் ரூ.1174 கோடியாக அதிகரிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13. அனைத்து மாநகராட்சிகளின் மேயர்களுக்கும், மன்றங்களுக்கும், ஆணையாளர்களுக்கும் கூடுதல் நிதி அதிகாரங்களை அளிக்க மாநகராட்சிச் சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகள் அனைத்திற்கும் பொதுவான சட்டம் ஒன்றும் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## நிருவாகச் சீர்திருத்தங்கள்

14. வருவாய்த் துறை பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுப்பதற்கும், நிருவாகத்தில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கும், கீழ் நிலையிலுள்ள அதிகாரிகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதற்கும் இந்த அரசு முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் தலைமையில் அமைத்துள்ள வருவாய்க் குழு ஆய்வு செய்து வருகிறது. பல்வேறு சான்றிதழ்கள், உரிமங்கள் வழங்குவதற்கான தற்போதைய நடைமுறைகளை எளிதாக்குவது பற்றியும், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு பற்றியும் இக்குழு தனது கருத்தைத் தெரிவிக்கும்.

15. 'ஆம்புட்ஸ்மென்' என்ற விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்கும் கருத்தை இந்த அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. பிற மாநிலங்களிலுள்ள சட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில்

அண்மையில் கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு ஆகியவற்றை ஆய்வு செய்து, நமது மாநிலத்திலும் விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான சட்ட முன்வடிவு குறித்து கருத்து தெரிவிக்கும்படி நீதிபதி திரு. இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நிருவாகத்தில் நிரந்தரமாக ஊழலற்ற நிலையைக் கொண்டுவருவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை இக்குழு விரைவில் பரிந்துரைக்கும்.

16. ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) நடைமுறையில் நிர்வாகம் தலையிட்டு அதன் அடிப்படை செயலமைப்பையே சட்டமன்றத்தின் ஒப்புதலின்றி மாற்றிய முந்தைய ஆட்சியின் முறைகேடுகள் இனி நடைபெறாமலிருக்க, ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் ஒளிவு மறைவில்லாத, நேர்மையான வழிமுறைகளைக் கையாளுவதற்கு ஒரு சட்டமியற்றப்படும். கடந்தகால நிகழ்ச்சிகளால் அரசின் ஒப்பந்த நடைமுறையின் மீதே நம்பிக்கை இழந்திருந்த மக்களிடையே, இச்சட்டத்தினால் மீண்டும் நம்பிக்கை உதயமாகும்.

17. பல நிலைகளில் உள்ள அலுவலர்கள் எடுக்கும் முடிவுகள் பற்றிய தகவல் பொதுமக்களுக்குக் கிடைக்காததுதான், நிர்வாகத்தில் நடைபெறும் முறைகேடுகளுக்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. எனவே மக்களுக்கு நிர்வாகம் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ளும் உரிமையை வழங்க "தகவல் பெறும் உரிமைச் சட்டம்" (**Right to Information Act**) ஒன்றை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரசின் திட்டங்கள்- பல்வேறு துறை மூலமாகச் செய்யப்படும் பணிகள் - பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கடைக்கும் அனுப்பப்பட்ட அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் அளவு, கையிருப்பு போன்ற விவரங்கள் மக்களுக்குக் கிடைக்கவும் தவறுகள் தட்டிக் கேட்கப்படவும் வழி பிறக்கும்.

## நமக்கு நாமே

18. இந்தியாவிலேயே முதன் முதலாக மக்கள் குறை கேட்கும் மனுநீதித் திட்டம் தமிழகத்தில்தான் கழக அரசால் கொண்டுவரப்பட்டது. அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வகை செய்யும் இந்தத் திட்ட

நடைமுறையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி, சீரமைத்து மக்கள் "நமக்கு நாமே" என்ற உணர்வின் அடிப்படையில் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்த்திடும் நிலைக்கு வழிகோலப்படும்.

## ஊரக வளர்ச்சி

19. 1997–98ஆம் ஆண்டுக்கு மைய, மாநில அரசுகளின் நிதியுடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.44.38 கோடியும், அதனோடு தொடர்புடைய "டிரைசம்" பயிற்சித் திட்டத்துக்காக ரூ.5.01 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், வரும் ஆண்டின் ஒதுக்கீடு ரூ.46.78 கோடியாக இருக்கும். இந்திரா வீடு கட்டும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 71,597 வீடுகளில் 61,428 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்படும். ரூ.7.85 கோடி செலவில் விவசாயிகளுக்கு ஜீவன்தாரா கிணறுகள் வெட்ட உதவி செய்யப்படும். ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்களினால் கிராமப்புறங்களில் 643.62 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு கூடுதலாக உருவாக்கப்படும்.

20. மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டத்தின் கீழ் 1996–97ஆம் ஆண்டில் ரூ.3.35 கோடி செலவில் 26,136 தனிநபர் கழிப்பறைகளும், பள்ளிகளில் 353 கழிப்பறைகளும் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக வரும் நிதியாண்டிலும் ரூ.7.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.43 கோடி செலவில், டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் "ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்" 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

22. கிராமப்புறங்களில் சிறார் படிப்பை ஊக்கப்படுத்துதல் முதியோர் கல்வித்திட்டம், நூலகங்கள் நடத்துதல், கிராமப் பொதுச் சொத்துக்களை பேணிக்காத்திட துணை புரிதல், மதுவிலக்குப் பிரச்சாரம் போன்ற பணிகளுக்காக மக்கள் நலப் பணியாளர்கள்

*ஊராட்சி தோறும் அமர்த்தப்படுவார்கள் என்று சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்: 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத் திட்டம், 1991ஆம் ஆண்டில் முந்தைய அரசால் கைவிடப்பட்டது. இதில் பணி இழந்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றிய விரிவான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் 17,500 ஆண்களும் 17,500 பெண்களும் இடம் பெறுவார்கள்.*

*23.* இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்கள் படிப்படியாக முன்னேற்றம் காணும் வகையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில் வரும் நிதியாண்டு முதல் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். இந்தக் கிராமப்புற திட்டத்திற்கு, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்று பெயர் சூட்டப்படும்.

### அடிப்படை வசதிகள்

24. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டு வசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்துக்கும் நியாய விலைக்கடை, கட்டாய ஆரம்பக்கல்வி, கிராமங்கள் அனைத்துக்கும் சாலை வசதி ஆகிய குறைந்தபட்ச ஏழு அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளிப்பதே எங்களின் தலையாய குறிக்கோள்.

### ஊரகக் குடிநீர்

*25. தமிழகத்திலுள்ள 66,631 ஊரகக் குடியிருப்புகளில் 34,459 குடியிருப்புகள் நாள்தோறும் ஒருவருக்கு 40 லிட்டர் என்ற அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன. பாதுகாக்கப்பட்ட குடிநீரே இல்லாமல் 154 குடியிருப்புகள் உள்ளன,* இந்த 154 குடியிருப்புகளுக்கும் இம்மாத இறுதிக்குள் குடிநீர் வசதி செய்யப்படும். *நபருக்கு நாள்தோறும் 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறுகின்ற 10,000 குடியிருப்புகளுக்கு முன்னுரிமையளித்து, வரும் இரண்டு ஆண்டுகளில் அவற்றுக்கு குறைந்தபட்சம் சராசரி 40 லிட்டர் குடிநீர் பெறக்கூடிய வகையில் திட்டங்கள்*

செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள 20,000 குடியிருப்புகளுக்கு, அடுத்த மூன்றாண்டு காலத்திற்குள் தேவையான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். இவ்வாறு வரும் ஐந்தாண்டு திட்டக் கால இறுதிக்குள், தமிழகத்திலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்சம் நபர் ஒருவருக்கு சராசரி 40 லிட்டர் அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறாத கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். இதற்காக 1997-98ஆம் ஆண்டில் ரூ.250 கோடி கணிசமான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நகர்ப்புற குடிநீர் வழங்கல்

26. 1997–98ஆம் ஆண்டிற்கு நகராட்சி, பேரூராட்சி குடிநீர் திட்டங்களுக்காக ரூ.31.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 5 நகராட்சி குடிநீர்த் திட்டங்களும், 18 பேரூராட்சி குடிநீர்த் திட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்படுவதுடன் மேலும் 4 நகராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 11 புதிய குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

27. சென்னை மாநகருக்கு தற்போது தினமும் 44 கோடி லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. நீர்த்தேக்கங்களில் நீரளவு திருப்திகரமாக இருப்பதால், தற்போது வழங்கும் குடிநீர் அளவைத் தொடர்ந்து நீடிக்க இயலும். இவ்வரசின் பெரு முயற்சியால் கிருஷ்ணா நதி நீர் சென்னை மாநகருக்கு 1996ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் வந்து சேர்ந்ததென்றாலும் உடனடியாக அக்டோபர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாக கால்வாயில் உடைப்புகள் ஏற்பட்டன. ஆந்திர அரசு இவ்வுடைப்புகளை செப்பனிடும் பணிகளை விரைந்து மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் ஜுன் திங்களுக்குள் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது மூன்று டி.எம்.சி ஆகவும் 1999–2000 ஆண்டில் 12 டி.எம்.சி. ஆகவும் கிடைக்க இருக்கிற கிருஷ்ணா நதி நீரை வழங்குவதற்காக பின்வரும் இரண்டு பெரிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரூ.513.90 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக ரூ.1533 கோடி மதிப்பீட்டில் மற்றொரு திட்டம் தீட்டப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

28. ரூ.572 கோடி செலவில் ஜப்பான் வெளிநாட்டுப் பொருளாதார கூட்டுறவு நிதி உதவியுடன், கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னையில் கழிவுநீரின் ஒரு பகுதியைச் சுத்திகரித்து தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும்.

## நகர்ப்புற வளர்ச்சி

29. சென்னைப் பெருநகரில் ரூ.326 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கோயம்பேட்டில் ரூ.98 கோடி மதிப்பீட்டில் சென்னை புறநகர் பேருந்து நிலையம் மற்றும் மேம்பாலம், பெரம்பூர் மற்றும் நுங்கம்பாக்கத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் மேம்பாலங்கள், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் தூளைமேட்டில் ரூ.21 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மற்றும் நீரேற்று நிலையங்கள் ஆகியவை அடங்கும். 1997–98ஆம் ஆண்டில் மேலும் ரூ.200 கோடி அளவிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

30. 1996–97ஆம் ஆண்டினைப் போலவே வரும் நிதியாண்டிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக, சென்னையைத் தவிர மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

31. தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற அமைப்புகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர்த் திட்டங்கள், வணிக வளாகங்கள், போக்குவரத்து போன்ற வசதிகளைப் பெருக்க தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியில் அரசின் பங்கு ரூ.120 கோடியாகவும் அகில இந்திய நிதி நிறுவனங்களின் பங்கு ரூ.51 கோடியாகவும் இருக்கும். இதன் மூலம் 1997–98ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ.60 கோடி கடன் வழங்கப்படும். இது தவிர, ரூ.30 கோடி அளவில் ஒரு மானிய நிதி உருவாக்கப்பட்டு நகர்ப்புற ஏழைமக்கள் பயன்பெறக் கூடிய திட்டங்களுக்கு உதவி அளிக்கப்படும்.

32. சென்னை விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு மைய அரசின் 1997-98 இரயில்வே நிதி நிலை அறிக்கையில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாமும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.50 கோடி ஒதுக்கியுள்ளோம். எனவே லஸ் முதல் வேளச்சேரி வரையிலான இரண்டாம் கட்டப் பணி தொடங்கப் பெறும்.

## பொது விநியோகமும் விலைவாசியும்

33. அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சென்ற நிதி நிலை அறிக்கையில் வணிக வரிகளில் பல சலுகைகள் வழங்கப்பட்டன. இதன் பலனாகவும், வேறுபல முனைப்பான நடவடிக்கைகளினாலும் பருப்பு, மிளகாய், சமையல் எண்ணெய் போன்ற சில இன்றியமையாப் பொருட்களின் விலை குறைந்துள்ள போதிலும், தமிழகத்தில் ஏற்பட்ட பெரு மழை, வெள்ளம், ஆந்திராவில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றம் இவைகளின் காரணமாக வெளிச்சந்தையில் அரிசி விலை ஏறி இப்போது ஓரளவு குறைந்திருக்கிறது. எனினும் ஏழை நடுத்தர மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற அரிசி போன்ற உணவு பண்டங்களின் விலை கட்டுப்பாட்டில் இருப்பதற்காக நியாயவிலைக் கடைகளில் அரிசி விலையை உயர்த்தாமலும், அளவைக் குறைக்காமலும் விநியோக முறையை ஒழுங்கு படுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

34. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் (Targeted Public Distribution System) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இதன்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு கிலோ 4 ரூபாய் வரை விலையையும் அனுமதித்துள்ளது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் அரிசிக்கு கிலோ 3.75 ரூபாய் வரையிலான விலைதான் இருப்பதாலும் - அளவு 20 கிலோ வரையில் என்று இருப்பதாலும் இந்த அடிப்படை மாறாமல் பொது விநியோக முறையில் போலி குடும்ப அட்டைகளை நீக்கி உண்மையான பயனாளிகளுக்கு வழங்க புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டப்படி ரூ.15,000க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுபவர்களுக்கு

அரிசி விலை கிலோ 7.50 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் நமது மாநில அரசு ரூ.15,000க்கு குறைவான ஆண்டு வருமானம் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கும், ரூ.15,000க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள நடுத்தர வர்க்கத்தினருக்கும் கிலோ ரூ.3.75 விலையிலேயே அரிசி வழங்குவதை தொடர்ந்து நிறைவேற்ற இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*35. பொதுவிநியோகத் திட்டத்தை சீரமைக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட குழு பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று ஆய்வு செய்து அளித்த அறிக்கையைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் மூன்று நிறத்தில் குடும்ப அட்டைகள் வழங்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. ரூ.15,000க்குக் கீழ் ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களுக்கு சிவப்பு வண்ண அட்டைகள் தரப்பட்டு அரிசியும் மற்றப் பொருள்களும் நியாய விலையில் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.10,000க்கு அதிகமாக வருமானம் பெறும் வசதி படைத்த குடும்பங்களுக்கு பச்சை வண்ண அட்டைகள் வழங்கப்படும். அந்த குடும்பங்களுக்கு ஏற்கெனவே அறிவித்தவாறு அரிசி வழங்காமல் மற்றப் பொருள்கள் மட்டுமே வழங்கப்படும். இந்த இரண்டு பிரிவிலும் சேராத நடுத்தரக் குடும்பங்களுக்கு மஞ்சள் வண்ண அட்டைகள் வழங்கப்படும். அந்த குடும்பங்களின் விருப்பத்திற்கேற்ப அரிசியோ அல்லது அரிசிக்கு பதிலாக மூன்று கிலோ சர்க்கரையோ அல்லது ஐந்து லிட்டர் மண்ணெண்ணெயோ வழங்கப்படும்.*

## வேளாண்மை

*36. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்காக 1997–98ல் ரூ.103.79 கோடி ஒதுக்கீட்டில் வேளாண்மை விரிவாக்கம், விதை உற்பத்தி, நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்பாடு, ஊரகச் சாலைகள், கிராமப்புற குடிநீர் வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.*

*37. வணிக ரீதியான வேளாண்மையைச் சார்ந்த தொழில்களான மலர், காய்கறி, காளான் வளர்ப்பு மற்றும் அவற்றின் ஏற்றுமதி ஆகியவற்றிற்குக் கடனுதவி வழங்க, 'நபார்டு' நிறுவனம் தமிழ்நாட்டில் ஒரு அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தை*

அமைத்துள்ளது. இந்நிதி நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.20 கோடியாக இருக்கும். இந்தியாவிலேயே முதன்முதலாக இந்தத் திட்டம் தொடங்கப்படுகிற மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

38. முக்கிய நகரங்களின் மையப்பகுதிகளில் நெருக்கடியான சூழ்நிலையில் செயல்படும் தானிய அங்காடிகள் புறநகர்ப் பகுதியில் தேவையான வசதியுடன் இயங்கிட முன்னோடி திட்டமாக மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதியில் நெல் வணிக அங்காடி ரூ.9.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

39. இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன், தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்த, டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தன் பணிகளை முடிக்கும் தருவாயில் உள்ளது. குழுவின் விரிவான பரிந்துரைகள் கிடைத்த பின்னர், அவற்றின் அடிப்படையில் அரசு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

40. வேளாண்மைக் கல்லூரியில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

## கால்நடை

41. புதுக்கோட்டை மாவட்டத்தில் டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் இயங்கும் கால்நடை வளர்ப்புத் திட்டம், மேலும் காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் ஆகிய தென் மாவட்டங்களுக்கும் ரூ.27.50 கோடி செலவில் விரிவுபடுத்தப்படும்.

## மீனவர் நலம்

42. மீனவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 4,000 இலவச வீடுகளும் இதர அடிப்படை வசதிகளும் செய்து தருவதற்காக 1996–97ஆம் ஆண்டில் ரூ.6.73 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். கடந்த

ஆட்சியில் கட்டி முடிக்கப்படவேண்டிய பல வீடுகள் கட்டிமுடிக்கப்படாமல் இருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், அவற்றையும் இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு கூடுதலாக ரூ.3.56 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், 1997-98ஆம் ஆண்டுக்கு, மேலும் 4,000 வீடுகள் கட்டி முடிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

43. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ரூ.48 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி கலங்களும் பல்வேறு விதமான மீன்பிடி வலைகளும் 16,350 மீனவர்களுக்கு வழங்கப்படும்.

44. மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படும் நேரங்களில் உடனடியாக தொடர்பு கொள்வதற்காக "வாக்கி - டாக்கி"களை மானிய உதவியுடன் அரசு வழங்கும்.

## பாசனம்

45. பெரியாறு அணையிலிருந்து கூடுதலாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்திட ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை சம்புவரயர் மாவட்டத்தில் செண்பகத் தோப்பு திட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வரட்டாறு குப்பத்து ஓடைத் திட்டம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடைத்திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

46. பாசனத்துறையில் ஒரு பெருந்திட்டமாக ரூ.1140 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டம்" உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.173 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களை நவீனமயமாக்குதலும், பாசனத்திறனை உயர்த்துதலும், பராமரித்தலில் விவசாயிகளைப் பங்கேற்கச் செய்தலும், நிறைவடையாமல் இருக்கும் 9 நீர்த்தேக்கத் திட்டங்களை விரைவாக முடித்தலும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

47. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அடவிநயினார்கோவில், கொடுமுடியாறு, நம்பியாறு, மற்றும் வடக்கு பச்சையாறு ஆகிய நான்கு திட்டங்களும், காமராசர் மாவட்டத்தில் கிருதமால் அணைக்கட்டு திட்டம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் மொரதானா திட்டம், ராஜாதோப்பு கிணறு திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு திட்டம், மதுரை மாவட்டத்தில் சோத்துப்பாறைத் திட்டம் ஆகிய ஐந்து திட்டங்களும் இந்தத் தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் ஆறு திட்டங்கள் *1989–90 ஆண்டுகளில் தொடங்கப்பட்டு பின்னர் வந்த ஆட்சியில் தொடரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*48. பாசன மராமத்துப் பணிகளை விவசாயிகளே மேற்கொள்ளும் குடிமராமத்து முறை செயலற்றுப்போய், நீர்ப் பாசனப் பராமரிப்புப் பணிகளுக்கு அரசையே சார்ந்திருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மராமத்துப் பணிகளில் படிப்படியாக பங்கேற்கக்கூடிய வகையில் தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் அமைப்புகள் உருவாக்கப்படும். இவ்வமைப்புகளுக்கு பொதுப் பணித் துறை அலுவலர்கள் தக்க தொழில் நுட்ப உதவிகளை வழங்குவார்கள்.*

*49. தமிழ்நாட்டில் சுமார் 40,000 ஏரிகள் உள்ளன. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் ரூ.115 கோடி மதிப்பீட்டில் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1997–98ஆம் ஆண்டில் ரூ.17.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான சிறு ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம் ரூ.270 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு ஜப்பான் நாட்டு நிதியுதவி பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

50. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்திலுள்ள மலட்டாற்றின் குறுக்கே பத்தரப்பள்ளி அருகே புதிய நீர்த்தேக்கம் ஒன்று ரூ.25.49 கோடி செலவில் வரும் மூன்றாண்டுகளில் கட்டப்படும். திருவண்ணாமலை-சம்புவரயர் மாவட்டம் செங்கம் வட்டத்தில் செய்யாற்றின் குறுக்கே குப்பநத்தம் கிராமத்தின் அருகே ரூ.35.46 கோடி செலவில் ஒரு நீர்த்தேக்கம் அடுத்த 3 ஆண்டுகளில்

உருவாக்கப்படும். தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் வள்ளி மதுரை கிராமத்தின் அருகே வரட்டாற்றின் குறுக்கே ரூ.19.20 கோடி செலவில் ஒரு நீர்த்தேக்கம் மூன்றாண்டுகளில் கட்டி முடிக்கப்படும். சிதம்பரனார் மாவட்டத்தில் சாத்தான்குளம் வட்டத்தில் சடையநேரி கால்வாய் ரூ.12.33 கோடி செலவில் அகலப்படுத்தப்பட்டு, புத்தம்தருவை வரை நீட்டிக்கப்படும். திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் நாயோடைத் திட்டமும், நிலக்கோட்டையில் சிறுமலை நீர்ப் பாசனத் திட்டமும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஏற்ற முடிவெடுக்கப்படும்.

### வனவளம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்

*51. ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூ.463.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வனவளத்திட்டம் என்ற மாபெரும் திட்டம் 1997–98ல் தொடங்கி ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அத்திட்டத்திற்கு ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டு விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*52. சந்தன மரக் கடத்தலைத் தடுத்திட தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கூடுதலாக 452 வனக் காப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சந்தன மர ஏலங்களில் நடந்துள்ள ஊழல்களும் களையப்பட்டு, சராசரியாக டன் ஒன்றுக்கு சற்றேறக்குறைய இரண்டு மடங்கு வருவாய் கிடைத்துள்ளது.*

*53. தேசிய நதி நீர் செயல் திட்டத்தின் கீழ், ரூ.38.20 கோடி செலவில் பவானி, குமாரபாளையம், ஈரோடு, பள்ளிப்பாளையம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களின் கழிவு நீரை காவிரி ஆற்றில் கலக்காதவாறு தடுத்து, நீர் மாசுபடாமல் பாதுகாக்கப்படும். வரும் நிதியாண்டில் காவிரி நதி நீர் மாசு கட்டுப்படுத்தும் திட்டத்திற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.11.60 கோடிக்கு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும்.*

## சாலைகள்

54. தொழில் வளம் பெருக்கிடுவதற்குத் துணையாக, மாநிலத்திலுள்ள அனைத்து சாலைகளையும் மேம்படுத்த பெருமளவுக்கு நிதி தேவைப்படுகிறது. இதனை முழு அளவுக்கு அரசே ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், மைய அரசு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் தனியார் துறை பங்கேற்கும் கொள்கையை வகுத்துள்ளது. அதற்கேற்ப தமிழ்நாட்டிலும் தேசிய நெடுஞ்சாலைகளை, தனியார் துறை மற்றும் அரசின் கூட்டு முயற்சி மூலம் அகலப்படுத்தி, தரமுயர்த்தி பராமரிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கோவை அருகே தேசிய நெடுஞ்சாலையில் புறவழிச்சாலை அமைத்தல், சென்னை–கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் காரனோடையில் புதிய பாலம் கட்டுதல் ஆகியவற்றை தனியார் துறை மூலம் நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. ரூ.950 கோடி மதிப்பீட்டில் அதிக போக்குவரத்து உள்ள சாலைகளை அகலப்படுத்தி தரமுயர்த்தும் திட்டம் ஒன்று உலகவங்கி நிதியுதவி பெறுவதற்காக வகுக்கப்பட்டுள்ளது.

55. திண்டிவனம் – பாண்டிச்சேரி – கிருஷ்ணகிரி சாலையில் ரூ.19.89 கோடி செலவில் ஒரு கீழ்பாலம் மற்றும் ஒரு வழிமாற்றம் (Interchange) கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விழுப்புரம் நகரில் கீழ்ப்பெரும்பாக்கம் இரயில் நிலையம் அருகில் ரூ.5 கோடி செலவில் மேம்பாலம் கட்டும் பணியை 1997–98ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையும் தென்னக இரயில்வேயும் மேற்கொள்ளும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றின் குறுக்கே மேலமணக்குடி–கீழமணக்குடி இணைப்புப் பாலம் ஒன்று சுமார் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

56. 1972ஆம் ஆண்டிலேயே கழக அரசு பொறுப்பில் இருந்தபோது 1,500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளோடு இணைக்கின்ற முதற்கட்ட முயற்சி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அடுத்தக் கட்ட முயற்சியாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமிருந்த 517 கிராமங்களில், 108 கிராமங்களுக்கு வரும் ஆண்டிலும் எஞ்சிய 409 கிராமங்களுக்கு 1998–99ஆம் ஆண்டிலும் இணைப்புச்

சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். அதைத் தொடர்ந்து 500லிருந்து 1,000 பேர் வரை மக்கட் தொகை கொண்ட 4,986 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளிக்க திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த ஐந்தாண்டுகளில் "சாலை வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இல்லை" என்ற நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

57. அடிப்படை வசதிகளுக்காக "நபார்டு" நிறுவனம் நிதியுதவி செய்ய முன்வந்தபோதிலும் முந்தைய ஆட்சி அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தற்போது அந்த நிறுவனத்திடமிருந்து சாலைகள் மேம்பாட்டிற்காக ரூ.250 கோடிக்கும், நீர்ப்பாசன வசதிக்காக ரூ.22 கோடிக்கும் இந்த அரசு ஒப்புதல் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டிலும் இதே அளவிற்கான நிதியுதவியைப் பெற்று சாலைகளை மேம்படுத்தும் பணிகளை தொடருவோம்.

## சாலைப் பராமரிப்புப் பணி

58. சாலைகளின் பராமரிப்பு மற்றும் தரம் உயர்த்துதல் ஆகியவற்றிற்காக “சாலை பராமரிப்பு நிதி“ ஒன்றை அரசு ஏற்படுத்தும். மோட்டார் வாகன வரி வசூலின் ஒரு குறிப்பிட்ட பங்கு இந்நிதியில் சேர்க்கப்படும். இந்நிதியை நிர்வகிப்பதில் சாலைகளை பயன்படுத்தும் அமைப்புகளின் கருத்துக்களை பெற்று, அதற்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும். சாலைப் பராமரிப்புக்காக ரூ.287 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

59. 1977ஆம் ஆண்டிற்கு பிறகு சாலைப் பணியாளர்களின் புதிய நியமனம் தடை செய்யப்பட்டு விட்ட காரணத்தால், தற்போது 4,975 பேர்களே இந்த பணியில் உள்ளனர். அந்தத் தடையை நீக்கி, இப்பணியை விரிவுபடுத்தி, முன்பு இருந்ததைப் போல 8 கிலோ மீட்டருக்கு இருவர் என்ற அடிப்படையில் 10,000 பேர் சாலைப் பணியாளர்களாக இந்த அரசினால் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## போக்குவரத்து

60. நடப்பாண்டில் ரூ.150 கோடி செலவில் 2,200 பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களுக்காக வாங்கப்படுவதுடன் வரும் ஆண்டிற்கு மேலும் ரூ.292 கோடி செலவில் 3,600 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட இருக்கின்றன எனும் செய்தி நலிவுற்ற பேருந்துகளால் அவதிப்படுவோர்க்கு இனிப்பு வழங்கும் செய்தியாகும்.

61. பேருந்துகள் கட்டுமானத்திற்காக (**Body Building**) வெளிநாட்டுத் தொழில்நுட்ப உறவுடன் நமது மாநிலத்தில் நான்கு இடங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் தொழிற்கூடங்கள் நிறுவப்படும்.

*62. கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பென்றால் குக்கிராமங்கள் நாடி நரம்புகளாக இருக்கின்றன என்பதை மறந்துவிடாமல் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளோடு போக்குவரத்து வசதியையும் செய்து கொடுப்பதில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு* பேருந்துகள் இயக்கப்படாத ஊரக உட்பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களின் சிறிய பேருந்துகளை (**Van**) இயக்க அனுமதிக்கலாம் என்று முடிவு செய்துள்ளது. 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்படாத உரிய வழித்தடங்களில் மட்டும் அவை இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

## மின்வசதி

*63. வேளாண்மைக்கும், தொழிலுக்கும் மின் வசதி தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான பெருமளவு மூலதனத்தை முழுமையாக அரசே ஏற்க இயலாது என்பதால் தனியார் துறையில் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*64.* 5 தனியார் நிறுவனங்களுடன் 2,280 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய, மின்சாரம் வாங்கும் ஒப்பந்தத்தில் (**Power Purchase Agreement**) கையெழுத்திடப்பட்டுள்ளது. *இவற்றில் சென்னை பேசின் பிரிட்ஜில் திட்டப்பணி தொடங்கப்பட்டு விட்டது. கோயில்களப்பால், பெருங்குளம் ஆகிய இடங்களில் 30 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு மின் உற்பத்தித் திட்டங்களையும், சென்னை பேசின் பிரிட்ஜ்*

எரிவாயு மின் உற்பத்தித் திட்டத்தின் உற்பத்தித் திறனை 120 மெகா வாட்டிலிருந்து 180 மெகாவாட்டாக உயர்த்தும் பணியினையும் தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது.

65. 1989–90ஆம் ஆண்டுகளில் இந்த அரசுதான் வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்தைத் தொடங்கியது. ஆனால், அதற்குப் பின்னர் பெரும் மின் உற்பத்தித் திட்டம் எதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே வரும் இரண்டாண்டுகளில் கூடுதல் மின் உற்பத்தியை எதிர்பார்க்க இயலாது என்பதைக் கருத்திற்கொண்டு குறைந்தகால திரவ எரிபொருள் மின்திட்டங்கள் தனியார் துறையில் செயல்படுத்தப்பட உள்ளன. 17 இடங்களில் 1,788 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப் படவுள்ளன.

66. மின் உற்பத்தியில் கணிசமான அளவு தனியார் முதலீடு செய்யப்பட்டாலும், மின் அனுப்புகை மற்றும் விநியோகப் பணிகளை தமிழ்நாடு மின் வாரியமே ரூ.382 கோடி செலவில் இந்த ஆண்டு செயல்படுத்தி வருகிறது. அடுத்த நிதியாண்டில், தமிழ்நாடு மின் வாரியத்தின் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.870.39 கோடியாக உயர்த்தப்படும். இதற்காக மாநில அரசு மின்வாரியத்துக்கு ரூ.250 கோடி மூலதனப் பங்குத் தொகையினை வழங்கும். மீதமுள்ள தொகையினை நிதி நிறுவனங்களிடமிருந்து மின்வாரியம் கடனாகப்பெறும்.

## கட்டமைப்பு வசதி நிதி

67. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும் வரவு-செலவுத் திட்டத்திற்குட்படாத நிதி ஆதாரங்களை போதிய அளவுக்குத் திரட்டுவது மிகவும் அவசியமாகிறது. வங்கிகள், காப்பீட்டு நிதிகள், மூலதனச்சந்தை, சிறு சேமிப்பு, ஓய்வூதிய மற்றும் வைப்புநிதிகள் போன்றவை இத்திட்டங்களுக்கு உகந்த முக்கியமான நிதி ஆதாரங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, இவற்றைப் பயன்படுத்தி நிதி திரட்டுவது குறித்து அரசுக்கு தக்க பரிந்துரைகள் செய்ய ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

68. அனைத்திந்திய வளர்ச்சி நிதிநிறுவனங்களில் ஏதேனும் ஒரு நிறுவனத்தையாவது சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவ வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்தி வந்துள்ளேன். நமது வேண்டுகோளை ஏற்று மைய அரசு இந்திய கட்டமைப்பு வசதி நிதி நிறுவனத்தை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு பதிவு செய்துள்ளது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## தொழிலும் வேலை வாய்ப்பும்

69. தமிழகம் தொழில் துறையில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டுமென்பது நமது குறிக்கோளாகும். இவ்வரசு பதவியேற்ற பிறகு தொழில் துறை வளர்ச்சிக்காக ஒளிவு மறைவற்ற (transparent) பல சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதால், பன்னாட்டு நிறுவனங்கள் விரும்பி வந்து தமிழகத்தில் பெருமளவில் புதிய தொழில்களை நிறுவக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஃபோர்டு மஹேந்திரா கார் தொழிற்சாலை
ஹுண்டாய் கார் தொழிற்சாலை
லான்சர் கார் தொழிற்சாலை
பில்கிங்டன் மிதக்கும் கண்ணாடி தொழிற்சாலை
(மறைமலை நகர்)
செயின்ட் கோபெய்ன் கண்ணாடி தொழிற்சாலை
(இருங்காட்டுக்கோட்டை)
பொள்ளாச்சியில் நவீன இறைச்சிக்கூடம்
கும்மிடிப்பூண்டியில் நைலான் தொழிற்சாலை
பொள்ளாச்சியில் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை

போன்ற தொழிற்சாலைகள் தமிழகத்திலே உருவாக திட்டங்கள் தொடங்கப்பட்டுவிட்டன. மேலும் பல தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

70. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) எண்ணூரில் 7000 ஏக்கர் பரப்பளவில் பெட்ரோலிய இரசாயனத் தொழிற் பூங்கா ஒன்றை நிறுவும். இப்பூங்காவில் பெட்ரோலிய

இரசாயனத் தொழிற்சாலைகளும், இயற்கை வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தும் மின்சக்தி நிலையமும் அமைக்கப்படும்.

71. ஜப்பானிய நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற் பேட்டைகளை அமைக்க முன்வந்துள்ளன. தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகமும் (SIPCOT) தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமும் (TACID) நடப்பாண்டில் 10,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, தொழிற்பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. இத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் இந்நிறுவனங்களுக்கு ரூ.40 கோடி பங்கு முதலீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னைக்கருகில் 200 ஏக்கர் பரப்பளவில் ஒரு கணினி (Computer) தொழில் நகரத்தையும், கோவையில் ஒரு கணினி தகவல் சாதனப் பூங்காவையும் (Software Park) உருவாக்கும்.

72. சிறு தொழில்கள், தம் தொழில் நுட்பத் திறமையை வளர்த்துக்கொள்ளவும், சந்தைப் போட்டியில் லாபகரமாக இயங்கக்கூடிய வகையில் வலிவு பெறவும், தேவையான அடிப்படை வசதிகளை அளிக்க அரசு உதவும். சிறு தொழிற்சாலைகள் ISO 9000 தரச் சான்று பெற தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) நிதியுதவி வழங்கும். மேலும், தேவையான நிதி வசதியில்லாத, தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் முதல் தலைமுறை தொழில் முனைவோர் சிறுதொழில் தொடங்க உதவும் வகையில், குறைந்த வட்டியிலான கடன் (Soft Loan) வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தும்.

## கல்வி

73. கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1997–98ஆம் ஆண்டுக்கு ரூ.2938 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் இடையிலேயே நின்று விடுவதைத் தடுத்து அவர்களைத் தொடர்ந்து கல்வி பயிலச் செய்யவும், அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்ற இலக்கை எய்தவும் தேவையான ஊக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்கள் நலப் பணியாளர்கள், தங்கள் பணிகளோடு, பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்தல், அவர்களைத் தொடர்ந்து பள்ளிகளில் பயில்வதற்கு ஊக்கமளித்தல் போன்றவற்றையும் கவனிப்பார்கள்.

74. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, 1996-97ஆம் ஆண்டில், 85 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. மேலும் 21 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 81 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலையுயர்த்தப்பட்டன. வரும் நிதியாண்டில் 168 தொடக்கப்பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்படும். 41 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 60 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 75 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

75. பட்டதாரிகள் யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த, முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்கள் ஆண்டுதோறும் தொழிற்கல்வி படிக்க ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று கடந்த ஆண்டு அறிவித்தத் திட்டத்தை செயல்படுத்தி வருவதோடு, படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் பிளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கும் அவர்கள் தொடர்ந்து மேல்படிப்பு படிப்பதற்காகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் திட்டத்தை வரும் கல்வி ஆண்டு முதல் செயல் படுத்துவோம்.

76. விளையாட்டு மேம்பாட்டுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டப்படும். கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள்விளையாட்டு அரங்கங்கள் (Indoor Stadia) அமைக்கப்படும். பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நன்கொடைத் தொகையுடன் விளையாட்டு மேம்பாட்டுக்காக ரூ.10 கோடி அளவில் ஒரு நிதியம் ஏற்படுத்தப்படும். மாநில அரசு இந்த நன்கொடைத் தொகைக்கு ஈடான தொகையை இந்த நிதிக்கு வழங்கும்.

77. சுய நிதிக் கல்லூரிகளில் போதிய இடவசதி, கட்டட வசதி, நூலகம் முதலிய கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பது பற்றியும், உரிய கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிகின்றார்களா என்பது பற்றியும் இவை குறித்த முறைகேடுகளைக் களைவது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை

தருவதற்காக அமைக்கப்பட்ட டாக்டர் எம். அனந்த கிருஷ்ணன் தலைமையிலான உயர்மட்டக் குழு தன் அறிக்கையை இரண்டு கட்டமாகத் தர முடிவு செய்துள்ளது. வரும் கல்வியாண்டுக்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அந்தக் குழுவுடன் விவாதித்துள்ளோம். அது பற்றிய முதல் கட்ட அறிக்கையை குழு விரைவில் தர இருக்கிறது. நிர்வாகத்தைச் சீரமைக்கும் வகையிலான இரண்டாம் கட்ட அறிக்கை பின்னர் தரப்படும். இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

78. தகவல் தொழில் நுட்பம் (Information Technology) நமது மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்கு திறவுகோல் என்று கருதப்படுகிறது. தகவல் தொடர்புகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்த பூமிப் பந்தே குக்கிராமம் போல (Global Village) குறுகிக் கொண்டு வருகிறது. அந்தத் துறையில் ஒவ்வொரு ஆண்டும் – ஒவ்வொரு மாதமும் – ஒவ்வொரு வாரமும், குறிப்பிடும் மாற்றங்கள் தோன்றி, நேற்றைய தொழில் நுட்பத்தைப் பத்தாம் பசலியாக (Obsolete) மாற்றி விடுகின்றன. அடுத்த நூற்றாண்டு "தகவல் துறை தொழில் நுட்ப" நூற்றாண்டாகும். அதற்கேற்ற அடிப்படையை உருவாக்கும் வகையிலும் 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற தகவல்துறை தொழில் நுட்பத்துறையில் உலகத்தின் முன்னோடியாக இருக்கும் விதத்திலும்; இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னையில் Information Technology Institute of Tamil Nadu (ITIT) என்கிற அமைப்பு நிறுவப்படும். முதலில் பதிவு செய்யப்பட்ட சுயநிதி அமைப்பாக (Registered Society) துவக்கப்பட்டு, படிப்படியாக அது ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றப்படும். இத்துறையில் முன்னணியில் இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுடனும் புகழ்பெற்ற தனியார் அமைப்புகளுடனும் வெளிநாடுகளில் வாழும் நமது நிபுணர்களுடனும் இந்த அமைப்பு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு Computer Graphics, Software Engineering and Hardware Systems, Multimedia, Telecommunications, Information Technology, Digital Technology போன்ற தகவல் தொழில் நுட்பத் துறையின் அனைத்து அம்சங்களிலும் தன்னிகரற்று விளங்கும் இளைஞர்கள் தயாரிக்கப்படுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக வரும் ஆண்டு ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

*79. திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரிக்கான இடத்தைத் தேர்வு செய்து ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கானச் சட்டமுன் வடிவு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*

**80. சேலம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தந்தை பெரியார் அவர்களின் பெயரால் புதிய பல்கலைக் கழகம் 1997-98ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## தொழிற்பயிற்சி

*81. இன்று தமிழ்நாடு தொழில்மயமாகிக் கொண்டுவரும் சூழ்நிலையில், தேவைக்கேற்ப திறன்மிக்க தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதற்காக, உலக வங்கி உதவியுடன் 31 தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.38 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும் 21 தொழிற்பயிற்சி நிலையங்கள் அடுத்த இரண்டாண்டுகளில் மேம்படுத்தப்படும்.*

## தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாடு

*82. 1974ஆம் ஆண்டு இந்த அரசு தொடங்கிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தீவிரமாக செயல்படுத்துவதற்கு கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு வரலாற்றை எழுதி வெளியிட இந்த அரசு 1970ஆம் ஆண்டு தொடக்கம் செய்தது. இதுவரை மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நான்கு தொகுதிகளை விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.*

*83. தமிழ்மொழியின் சிறப்பை, இலக்கியத்தின் பெருமையை உலகளாவிய நிலைக்கு உயர்த்தவும், உலகெங்கிலுமுள்ள தமிழர்களோடு தொடர்பு கொள்ளவும் தமிழுடன் தொடர்புடைய பிற துறைகளுடனும், மொழிகளுடனும் ஆய்வு மேற்கொள்ளவும், வழி வகுத்தளிப்பது என்ற அடிப்படைக் கொள்கையுடன் 1968–இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் நிறுவப்பட்டு 1970ஆம் ஆண்டில்*

கழக அரசு காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. பிற்காலத்தில் இதற்கான போதிய கவனம் செலுத்தப்படவில்லை. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் புத்துயிரூட்டி, அது ஏற்படுத்தப்பட்டதற்கான நோக்கங்களை எய்தும் வகையில் திட்டங்களை செம்மையாக செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

84. ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (Part-I) தமிழ் கட்டாய பாடமாகவும், 2-வது பாகமாக (Part-II) ஆங்கிலம் கட்டாய பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய் மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழி வகை செய்யப்படும். இதனால் சிறுபான்மையரது மொழி நலம் காக்கப்படுவதுடன் தமிழைப் படிக்காமலேயே தமிழ் நாட்டில் ஒருவர் பட்டம் பெறமுடியும் எனும் நிலையும் நீங்கும்.

85. சிறுவயதிலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களைப் புகழ்மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு புது முயற்சியாக 5 மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் தொடங்கப்படும். இதற்கென ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இசைப் பள்ளிகளில் தமிழிசைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நாதஸ்வரம், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, கோட்டு வாத்தியம் போன்ற தொன்மையான இசைக் கருவிகளில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இவ்வகை இசைக்கும் புத்துயிரூட்டி இந்தப் பள்ளிகளில் இந்த இசையைப் பயிற்றுவிக்க ஆவன செய்யப்படும். இசைக் கல்லூரிகளில் தமிழ்ப் பண் ஆராய்ச்சி மேற்கொள்ள வகை செய்யப்படும்.

86. நமது பண்பாட்டுப் பெருமையை நானிலமீது நிலை நாட்டிய பெருமகனார் விவேகானந்தர் சென்னையில் தங்கியிருந்த கடற்கரை மாளிகையை கலாச்சார கண்காட்சி ஒன்றினை நடத்திக் கொள்ள ராமகிருஷ்ண மடத்தினருக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பக்கட்டமாக மூன்றாண்டு காலத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

87. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாக தமிழ் வானில் ஒளிவிட்டவரும் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான செந்தமிழ் வித்தகர்-இனமான ஏந்தல் தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும், ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலன்

*88. தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகளிலும், தரமான மருத்துவ வசதி அளிப்பதிலும் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தையும், மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இரண்டாவது இடத்தையும், சிறு குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைத்தலில் மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது.*

*89. அரசு மருத்துவமனைகளில் வெளிநோயாளிகளுக்கான சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு மருத்துவமனைகளில் வெளி நோயாளிகளின் வருகை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேபோல அனைத்து ஊராட்சி ஒன்றிய தொடக்கச் சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கி பொதுமக்களுக்கு அவசரச் சிகிச்சை முதலியன செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*90. அரசின் சார்பான தமிழ்நாடு எயிட்ஸ் தடுப்புச் சங்கம் ரூ.20 கோடி செலவில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து விழிப்புணர்ச்சி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை மத்திய அரசும் உலக வங்கியும் பாராட்டியுள்ளன.*

*91. நாங்கள் 1971ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளித்து, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் மாவட்டங்களில் மறுவாழ்வு இல்லங்களை நிறுவினோம். பின்பு 1989ஆம் ஆண்டு தொழுநோயை அறவே ஒழிப்பதற்காக கூட்டு மருந்து சிகிச்சை என்னும் சிறப்புத் திட்டத்தையும் தீவிரமாகச் செயல்படுத்தினோம். இந்த நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில்*

தொழுநோய் கண்டவர்களின் எண்ணிக்கை 1983இல் பத்தாயிரம் பேர்களுக்கு 120 பேர் என்ற நிலையிலிருந்து 1996இல் 7 பேர் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. தொழுநோயை தமிழ் நாட்டிலிருந்து அறவே ஒழிக்கும் நோக்கத்துடன் ரூ.4 கோடி மதிப்பிலான ஒரு திட்டம் 1997ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

92. 1972-73ஆம் ஆண்டில் தமிழகத்தில் கண்ணொளி வழங்கும் திட்டம் பெருமளவில் கழக அரசினால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. கண்புரைநோய் சிகிச்சை அளிப்பதை சிறப்பாகவும், விரிவாகவும் செயல்படுத்த மாவட்ட அளவில் கண் சிகிச்சை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. உலக வங்கி உதவியுடன் கண்புரை நோய் சிகிச்சை அளிக்கும் திட்டம் ரூ.64 கோடி மதிப்பீட்டில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

93. 1996-97ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. அதில் 200 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். ரூ.21 கோடி செலவில் 1997-98 ஆம் ஆண்டிலும் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப்படும். இந்திய முறை மருத்துவ வளர்ச்சிக்காக ரூ.57.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வயது முதிர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ.150-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படும்.

94. பல இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை தத்து எடுத்துக்கொண்டு நல்லமுறையில் பராமரிக்க அப்பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அவற்றிடம் ஒப்படைப்பது மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களில், கட்டடம், உபகரணங்கள் வசதிகளை அதிகரிக்க இயலும்.

## சத்துணவு

95. இளஞ்சிறார் கல்வியில் ஊக்கம் பெற மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட

சத்துணவுத் திட்டத்திற்கு 1996-97ஆம் ஆண்டில் ரூ.401.44 கோடியளவிற்கு அதிகரித்து ஒதுக்கினோம். 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.405.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

96. சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை மத்திய அரசின் ஐந்தாவது நிதிக்குழுவின் அறிக்கை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு - மாநில அரசின் அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்

97. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்கள், கல்வி நிலையை உயர்த்தும் திட்டங்கள், அடிப்படை வசதிகளை அளிக்கும் திட்டங்கள் என மூன்று வகையாகத் திட்டங்கள் தீட்டப்பட்டு நிறை வேற்றப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு, இந்தத் துறைக்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டில் ரூ.208.10 கோடி ஒதுக்கீடு செய்திருக்க, 1996-97ஆம் ஆண்டில் இது ரூ.267.39 கோடியாக உயர்த்தப்பட்டது. வரும் ஆண்டில் இது ரூ.334 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

98. ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ.15.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, இந்திரா குடியிருப்புத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வரும் ஆண்டில் ஏறக்குறைய 61,000 இலவச குடியிருப்புகள் கட்டப்படும்.

99. ஆதிதிராவிட மாணவர்களுக்காக 40 புதிய மாணவர் இல்லங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டிலும் ரூ.1.70 கோடி செலவில் மேலும் 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். ஐந்து நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படும்.

100. இதுவரை அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கான காலியிடங்கள் அனைத்தும் 1997 ஜூன் திங்களுக்குள் நிரப்பப்பட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

*101. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக நடப்பு ஆண்டில் ரூ.54.31 கோடி ஒதுக்கப்பட்டது. இது வரும் ஆண்டில் ரூ.63.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டில் 40 பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகளும், 22 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களும் தொடங்கப்பட உள்ளன. 13 மாணவர் இல்லங்களுக்காக அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.*

*102. பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய கல்வி துறையிலும் சமுதாயத்துறையிலும் பின்தங்கியுள்ள மக்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதற்கான முறையில், சட்ட ரீதியான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் தேவையான முயற்சிகள் எடுக்கவும் இந்த அரசு ஏற்றுக்கொண்ட உறுதியிலிருந்து நிச்சயம் பின்வாங்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*103. நாங்கள் 1990ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான், முதன் முதலாக, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த அனைத்து வகுப்பினருக்கும் விரிவுபடுத்தினோம். அதற்கு முன்புவரை சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் போன்ற ஒரு சில குறிப்பிட்ட வகுப்பினர்க்கு மட்டுமே இத்திட்டம் பொருந்துவதாக இருந்தது. விரிவுபடுத்தப்பட்ட இந்தத் திட்டத்துக்கு சென்ற ஆண்டு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் ஆண்டு இந்த ஒதுக்கீடு ரூ.10 கோடியாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.* இந்த அரசு எடுத்துள்ள மேலும் ஒரு முக்கிய முடிவையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். வறுமைக்

கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தை, கிராமப்புறங்களில் வாழும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்காக மட்டும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி ஒதுக்கப்படும்.

104. அதுமட்டுமல்ல, வீட்டு வசதியைப் பொறுத்தவரை, அனைத்து ஏழை எளியவர்களுக்கும் பொதுவான அணுகுமுறை தேவை என்ற அடிப்படையில், இந்த இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் கிராமப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 1997-98 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்படும்.

**கைத்தறி நெசவாளர் நலன்**

*105. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, கைத்தறி நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் (Insurance) தொகையை ரூ.15,000லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*

*106. ஜவுளித் துறையில் தமிழகம், சிறப்பான இடத்தை நீடித்து வகிப்பது அவசியம்.* இதன் பொருட்டு, பருத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தல், கைத்தறி, விசைத்தறி, மில் துறை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக விரைவில் ஒரு கொள்கையை வகுத்து செயல்படுவதற்கு அரசு முன்வந்துள்ளது. தமிழகத்தில் இப்போதுதான் முதல் தடவையாக ஜவுளிக் கொள்கை **(Textile Policy)** அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

**இலங்கை தமிழ் அகதிகள் நலன்**

*107. தமிழ்நாட்டுக்குப் புகலிடம் தேடிவந்த ஈழத் தமிழ் அகதிகளில், திரும்பிச் சென்றவர்கள் போக இன்னும் 60 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மாவட்டங்களில் உள்ள பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.* திங்கள் ஒன்றுக்கு இவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.150 என்பதை மேலும் உயர்த்தித் தரும்படி நாம் கேட்டதை மைய அரசு இதுவரை ஏற்கவில்லை. மைய அரசு ஏற்கும்

வரையில் மாநில அரசின் சார்பாக அவர்களுக்குக் கூடுதலாக மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் அளிக்கப்படும்.

108. இந்த அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவும் வகையில், இவர்கள் முகாமுக்கு வெளியில் சென்று வேலை பார்த்து சம்பாதித்துக் கொள்ளவும், இவர்களின் குழந்தைகள் அருகில் உள்ள கல்வி நிலையங்களில் கல்வி பயிலவும் அரசு அனுமதித்துள்ளது.

109. இவர்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு முகாம்களை 1997-98 ஆம் ஆண்டில் ரூ.5.63 கோடி செலவில் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த அகதிகள் குடும்பங்களுக்கும் இந்த ஆண்டு இலவசமாக வேட்டி, சேலை தரும் திட்டம் விரிவு படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

110. இலங்கையில் தொடர்ந்து வரும் பிரச்சினைகளினால் அங்கு வாழும் தமிழர்கள் இலங்கைக்குள்ளேயே அகதிகளாக வாழும் அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது ஆறாத்துயரம் அளிக்கிறது. இவர்களின் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுகி உதவுமாறு இலங்கை அரசுக்கு எடுத்துரைக்கும்படி இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

## மகளிர் நலன்

111. மகளிர் மேம்பாட்டுக்கென 1996-97ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.49.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதை 1997-98ஆம் ஆண்டில் ரூ.54.70 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

112. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூ.1420 கோடி மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளில் பத்து இலட்சம் பெண்கள் தன்னிறைவு குழுக்களாக இணைந்து அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 61,540 பெண்கள் 3,077 குழுக்களாக

ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். 1997–98 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பெண்கள், குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு ரூ.125.80 கோடி கடனுதவி பெறுவர்.

113. கிராமப்புறங்களில் பெண்கள் சுகாதாரம், சத்துணவு, குடும்பநலம், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி, அறிவொளி, வாழ்க்கைக் கல்வி போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வழிவகை செய்ய, மகளிர் நல மையங்களை உருவாக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு 50 சத்துணவுக் கூடங்களில் இந்த மையங்கள் தொடங்கப்படும்.

114. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரில், மகளிர் தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அறிவித்தோம். அதன்படி, குடும்பத்தில் முதல் தலைமுறையாக தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ.50,000 வரம்புக்குள் பத்து சதவீதத் தொகை மானியமாக வழங்கப்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

115. மத்திய அரசின் உதவியுடனான வாணிபம் சார்ந்த பெண் தொழில் முனைவோர் உதவி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், (TREAD எனப்படும் திட்டம்) முதற்கட்டமாக சென்னையில் 5000 பெண்களைத் தேர்ந்தெடுத்து தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் அவர்களுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் மற்றும் வாணிபத்தினைத் துவங்க உதவி செய்யப்படும். துவக்கத்தில் இத்திட்டத்தின்கீழ், சென்னைப் பகுதியில் உணவு பதப்படுத்துதல், தயாரிக்கப்பட்ட ஆடைகள், தோல் பொருள்கள் உற்பத்தி ஆகிய தொழில்களைத் துவங்க பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கப்படும். இந்த நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், இரண்டு பங்கு கடனாகவும் அளிக்கப்படும்.

116. கழக ஆட்சியில் தமிழகத்தில் முதன் முதலாக பெண் காவலர்கள் 1973ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்கள். இப்போது அவர்களின் எண்ணிக்கை 2,800 ஆக இருக்கிறது. மொத்தக் காவலர்கள் அளவில் 30 சதவீதம் பெண் காவலர்கள் நியமிக்கப்பட

வேண்டுமென்ற இந்த அரசின் குறிக்கோள் நிறைவேறிட இன்னும் மூன்று நான்கு ஆண்டுகள் ஆகும் எனினும் இப்போது முதல் கட்டமாக வரும் ஆண்டில் கூடுதலாக 5,000 பெண் காவலர்கள் பணிக்கு நியமிக்கப் படுவார்கள் என்பதை பெருமிதத்துடன் அறிவித்திடுகின்றேன்.

### சமூகக் காப்பீட்டுத் திட்டங்கள்

*117. பல்வேறு சமூகக் காப்பீட்டுத் திட்டங்களுக்காக அரசு ரூ.108 கோடி 1996-97ல் செலவிட்டுள்ளது. 1997-98ல் இதற்காக ரூ.113 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காத்திருப்போர் பட்டியலில் அதிகம் பேர் உள்ளதைக் கருத்தில் கொண்டும், மக்களிடமிருந்து முறையீடுகள் வந்துள்ளதைக் கருத்தில் கொண்டும்,* மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக 1997-98ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் 20,000 தம்பதியர் பயனடைவர்.

118. இருதய அறுவை சிகிச்சை, மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை, அவை தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்கு அதிக அளவு செலவு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் விண்ணப்பித்தால் அவர்களுக்கு இன்று முதல், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி அளிக்கப்படும். அதேபோன்று, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள, ஊனமுற்றவர்களுக்கு, செயற்கைக் கால் அல்லது கைகள் பொருத்துவதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 அளிக்கப்படும்.

*119. ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி கலைப்பயிற்சி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975இல் துவங்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் அப்போது 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. ஆனால் 1977-78 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பிறகும் அரசு மான்யம் வழங்கப்படவில்லை. தற்போது 22 கோயில்களில் 735 ஆதரவற்ற குழந்தைகளுடன் திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன.* இந்தக் கருணை இல்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும், கூடுதலாக

தேவைக்கேற்ப கருணை இல்லங்களை கோயில்களில் துவக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதற்காகும் செலவில் 50 சதவீதத்தை இனிமேல் அரசு ஏற்கும்.

120. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து அண்மையில் உச்சநீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நிறைவேற்றுமுகத்தான் இவ்வரசு "குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலநிதி" ஒன்றினை உருவாக்கிட முடிவெடுத்துள்ளது.

121. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய அரசு அளிக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களின் நீண்டநாளைய கோரிக்கையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு மாநில அரசு அளிக்கும் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.250 லிருந்து ரூ.500 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஊனமுற்றோர் நலன்

*122. உடல் ஊனமுற்றோர் நலனில் இவ்வரசு எப்போதுமே தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்துள்ளது. இளம்பிள்ளைவாத நோயை அறவே ஒழிக்கவும், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் ஒரு பெரும் திட்டத்தை கழக அரசு 1989-90 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. தற்போது அண்ணா மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோரை சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாக செயல்பட வழிவகை செய்ய ஒரு மாவட்ட மறு வாழ்வு மையம் சிறப்பாக இயங்கி வருகின்றது. அதுபோன்று தமிழ்நாட்டில் வரும் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் மறு வாழ்வு மையங்கள் தொடங்கப்படும். இம்மையங்கள் மூலம் கிராமப்புறங்களிலுள்ள ஊனமுற்றோர்களைக் கண்டறிந்து, தேவைப்படுபவர்களுக்கு மாவட்ட மருத்துவ மனையில் மருத்துவ சிகிச்சை வழங்கப்படும். அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை அளித்து, அவற்றைப் பயன்படுத்த அவர்களுக்குப் பயிற்சியும் அளித்து, உபகரணங்கள் பழுது அடைந்தால் அவை சீர் செய்யப்பட்டு அவர்களுக்கு அளிக்கப்படும். அரசு அளிக்கும் ஊனமுற்றோர்க்கான நலத் திட்ட உதவிகள் இவர்களுக்கு முறைப்படி உடனே கிடைப்பதற்கும் இந்த மறு வாழ்வு மையங்கள் உதவி புரியும்.*

123. பேருந்துகளில் சாதாரண வழித்தடங்களில் மாத்திரமல்லாமல் விரைவுப் பேருந்து வழித்தடங்களிலும் கண்ணற்றோர், கால்முடமானோர் ஆகிய ஊனமுற்றோருக்கு இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

## தொழிலாளர் நலன்

*124. கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர் பிரச்னைகளை ஆய்ந்தறிந்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிப்பதற்கு தனித்தனியே குழுக்கள் விரைவில் அமைக்கப்படும்.*

*125. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அறுவடைக்கூலி பணமாகவோ அல்லது அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் எட்டில் ஒரு பங்காகவோ அளிக்கப்படும். குறைந்தபட்ச ஊதிய உயர்வு பற்றிய அறிவிக்கை அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும்.*

## இந்து சமய அறநிலைய நிர்வாகம்

*126. திருக்கோயில்களின் நிர்வாகத்தை செம்மைப்படுத்த 1996ஆம் ஆண்டு இந்த அரசு நடவடிக்கை எடுத்து இந்து சமய அறநிலையச் சட்டம் திருத்தப்பட்டது. அச்சட்டத்தின் கீழ் முதலமைச்சர் தலைமையில் அறநிலையத்துறை அமைச்சரை துணைத் தலைவராகக் கொண்டு, சமயச் சான்றோர்கள், தமிழறிஞர்கள் என எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் நடைபெற்று, திருக்கோயில் நிர்வாகத்தை மேம்படுத்துதல் அவற்றின் வருவாயைப் பெருக்குதல் தொடர்பான சில முக்கிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.*

127. நாளும் இன்னிசையால் தமிழ் முழங்கும் இலக்கியங்களும் நன்னெறி நூல்களும் நிரம்பவே உள்ளன. இன்றைய இளைய தலைமுறையினரும் பிறரும் இவற்றின் அருமையையும் பெருமையையும் அறியும் வண்ணம் திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலடியார் போன்ற நூல்களை திருக்கோயில்களில்

பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும். தேவைக்கேற்ப இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## செய்தித் துறை

128. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபின்பு தமிழ்ப் பெருந்தகைகளின் நினைவகங்களைப் பராமரிப்பதில் அதிக அக்கறை செலுத்தப்படுகின்றது. கன்னியாகுமரியில், திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை அமைக்க 1990ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு பணி தொடங்கப்பட்டது. இந்த சிலை அமைக்கும் பணி கணபதி ஸ்தபதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சிலையை விரைவில் அமைத்திட அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும். இந்தப் பணிக்காக ரூ.2.46 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள அண்ணா சதுக்க மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.1.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதே போல, காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவக மேம்பாட்டுப் பணிக்கு ரூ.4.20 இலட்சமும், நாகர்கோவிலில் ஜீவா நினைவுச் சின்னம் அமைக்க ரூ.15.50 இலட்சமும், சென்னையில் மகாகவி பாரதியார் நினைவகத்துக்கு ரூ.8.30 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

129. உத்தமர் காந்தியடிகள் மண்டப முகப்பில் அவரது மார்பளவுச் சிலையும், மூதறிஞர் ராஜாஜி நினைவாலயத்தில் அவரது மார்பளவுச் சிலையும் இருப்பது போல பெருந்தலைவர் காமராஜர் நினைவிட முகப்பிலும், பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பிலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நினைவிட முகப்பிலும் அவர்களது மார்பளவுச் சிலைகள் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.

130. நேதாஜி நூற்றாண்டு விழாவினையொட்டி, நேதாஜியின் முழு உருவச் சிலை சென்னையில் அமைக்கப்பட்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

131. விடுதலை நாள் பொன்விழா ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை முடிவு செய்யவும், அரசுக்கு ஆலோசனை நல்கவும் முதலமைச்சர் தலைமையில் பொன் விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

132. தமிழக சட்டமன்றப் பேரவை நீண்ட புகழும் பாரம்பரியமும் மிக்கதாகும். 1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின்படி, சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகளான மொத்தம் 215 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப்பேரவை அமைக்கப்பட்டது. இச்சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டம் 14.07.1937 அன்று காலை 11.00 மணிக்கு சேப்பாக்கத்தில் உள்ள செனட் இல்லத்தில் நடைபெற்றது. அந்நாளே நம் மாநிலத்தில் சட்டமன்றப் பேரவை உருவான நாளாகும். வரும் 14.07.1997 அன்று தமிழக சட்டமன்றப் பேரவை 60 ஆண்டுகளை முடிக்கும் நிலையில், சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவது என்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

133. மக்களாட்சி அமைப்பின் உயிர்நாடி தேர்தல்களாகும். தமிழ்நாட்டில், நாடு விடுதலை பெற்ற பின்பு 11 பொதுத்தேர்தல்களும், விடுதலை பெறுவதற்கு முன்பு 7 பொதுத்தேர்தல்களும் நடந்துள்ளன. முதல் தேர்தல் 30.11.1920 அன்று தமிழ்நாட்டில் நடந்து, ஏ. சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் நீதிக் கட்சி ஆட்சி அமைந்தது. அதன் பிறகு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, தமிழகத் தேர்தல் பவளவிழா சிறப்பாக இந்த ஆண்டு நடத்தப்படும்.

134. திரைப்படத் துறையிலே சண்டைக் காட்சிகளின் போது நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்கள் உயிரிழக்க நேரிட்டால் ஒரு இலட்சம் ரூபாயும், செயல்பட முடியாத அளவிற்கு ஊனமுற்றால் ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று நான் ஏற்கனவே அறிவித்ததையொட்டி, அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### அண்ணல் அம்பேத்கர் திரைப்படம்

135. கடந்த நிதிநிலை அறிக்கையின் திரைப்படத் துறையினர் மகிழத்தக்க அளவுக்கு பல வசதிகளும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவார்கள். அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றினை புகழ் பெற்ற குணச்சித்திர நடிகர் மம்முட்டி நடிப்பில் ஆங்கில மொழியில் திரைப்படமாக எடுக்கிற முயற்சிக்கு தமிழக அரசின் சார்பில் வாழ்த்துக் கூறுவதுடன், அந்தப்படம் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுமேயானால் தமிழக அரசின்

பரிசுத் தொகையாக அதன் தயாரிப்பாளருக்கு பத்து இலட்ச ரூபாய் வழங்கப்படுமென தெரிவித்துக் கொள்கிறேன்.

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

136. பத்திரிகைத் துறையில் தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ.25,000 நிதி வழங்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசு அலுவலர் நலன்

*137. சென்ற நிதிநிலை அறிக்கையில் அரசு அலுவலருக்காக இதுவரை மத்திய மற்றும் இதர மாநில அரசுகள் செயல்படுத்தாத பல புதிய திட்டங்களை அறிவித்திருந்தேன். அவை அனைத்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.*

*138. சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி முன்னாள் கிராம அதிகாரிகளின் பிரச்சினைகளை முழுவதுமாகத் தீர்க்கும் வகையில் 5–12–1986 முதல் மாதந்தோறும் ரூ.175 ஓய்வூதியம் வழங்கவும், அவர்களில் சிலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களின் குடும்பத்திற்கு மாதந்தோறும் ரூ.100 குடும்ப ஓய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.*

*139. ஐந்தாவது மத்திய ஊதியக் குழு, தனது பரிந்துரைகளை, மைய அரசிடம் அளித்துள்ளது. மைய அரசு அதன் முடிவுகளை அறிவித்தவுடன் ஆளுநரின் உரையில் குறிப்பிட்டவாறு அதனை இவ்வரசு* விரைவாகப் பரிசீலித்து, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் பயன்கள் கிடைக்க ஆவன செய்யப்படும்.

### மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை

*140. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கு ஏற்ப மதுரை மாநகரில் சென்னை உயர்நீதிமன்றக் கிளையினை அமைக்கும் பணி தீவிரப் படுத்தப்பட்டு நீதிமன்றத்திற்கு தேவையான*

நிலத்தினை கையகப்படுத்தும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றக் கிளையினை அமைத்திட நிதியும் உள்ளது. 1973ஆம் ஆண்டு முதல் பரிசீலனையில் உள்ள இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதில் இனியும் காலதாமதம் இராது.

### தென் மாவட்டங்களில் வறட்சி

141. தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையை அந்தந்த மாவட்டங்களில் உள்ள அமைச்சர்கள், மக்களின் பிரதிநிதிகள், அதிகாரிகளுடன் சென்று உள்ளாட்சித் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சரும் ஒருவார காலம் நேரில் கண்டு அறிக்கையொன்றை தந்துள்ளனர். அதன் அடிப்படையில் தென் மாவட்டங்களில் வறட்சித் துயர் துடைத்திடவும், முக்கியமாக வேலைவாய்ப்புப் பணிகளை உருவாக்கிடவும் பரிந்துரைக்கப்பட்ட தொகை ரூ.42 கோடி ஒதுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### மத நல்லிணக்கம்

142. நமது நாட்டில் பெரும்பான்மை சமுதாயம் என்பது கிளைகள் நிரம்பிய ஒரு மரம் போலவும் சிறுபான்மைச் சமுதாயமென்பது அம்மரத்தில் படரும் கொடி போலவும் அமைந்து - மரம், கொடி படர்வதை மறுக்காமல் இருப்பதற்கொப்பவும், கொடி மரக்கிளைகளை அறுக்காமல் இருப்பதற்கொப்பவும், பெரும் பான்மையினரும் சிறுபான்மையினரும் மதநல்லிணக்க மனித நேய உணர்வுடன் வாழ வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும். அந்த உணர்வுகளுக்கு ஊறு நேரா வண்ணம் தடுத்திடவும்- ஊறுநேர்ந்த இடத்து ஓடிச் சென்று அமைதிப் படுத்திடவும் நல்லெண்ணமுடைய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயல்படவுள்ளனர் என்றாலும் கூட, அவர்கள் செயலாக்கத்திற்குத் துணைபுரியும் வண்ணம் அதி விரைவுப் படையொன்று (Swift Action Force) காவல் துறையின் ஒருபிரிவாக அமைக்கப்படுகிறது. இந்தப் படையினர் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் மொத்தம் ஆயிரம் பேர் இருப்பர். இந்த ஆண்டு, முதல் கட்டமாக கோவையில் இருநூறு பேருடன் இப்பிரிவு தொடங்கப்படும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

143. மைய அரசு செயல்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போல நமது மாநிலத்திலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் தேவை என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கோரினர். அக்கோரிக்கையை ஏற்று ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தமது தொகுதியில் செயல்படுத்த விரும்பும் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய பணிகளின் பட்டியலை, சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்தால் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இப்பணிகள் செயல்படுத்தப்படும். இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

## ஆண்டுத் திட்டம்

144. 1997-98 ஆம் ஆண்டு, ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு ஆகும். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக துறைவாரியாக திட்டங்களை வகுக்க, நமது மாநில திட்டக் குழுவில் பல்வேறு துறைகளுக்காக 56 பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களின் அறிக்கைகள், 1997ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் வழங்கப்படும். தமிழகத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட நிர்ணய அளவு ரூ.10,200 கோடி ஆகும். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட நிர்ணய அளவு ரூ.20,000 கோடிக்கு மேல் இருக்கும்.

145. தொழில் மற்றும் பணித் துறைகளின் வளர்ச்சி மூலம்தான் வேலைவாய்ப்பின்மையைக் குறைக்க இயலும். எனவேதான், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்கு, இந்த அரசு, அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலையான விலைகளின் அடிப்படையில் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்த மாநிலத்தின் மொத்த நிகர உற்பத்தி வளர்ச்சி ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 7 சதவீதத்திற்குமேல் அதிகரிக்க இந்த அரசு முனைப்பான முயற்சிகளில் ஈடுபடும். இந்தக் குறிக்கோளை எய்தும் நோக்கத்துடன், 1997-98ஆம் ஆண்டுத் திட்ட

ஒதுக்கீடு ரூ.4000 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திட்டச் செலவினமான ரூ.334 கோடி அடுத்த ஆண்டு திட்டம் சேராத செலவினத்திற்கு மாற்றப்படுகிறது. இதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அடுத்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு இந்த ஆண்டின் ஒதுக்கீட்டைவிட 17.4 சதவீதம் கூடுதலாக இருக்கும்.

## நிதி நிலைமை

146. 1996–97 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தை 1996 ஜுலைத் திங்களில் தாக்கல் செய்தபோது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.11,068.07 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.12,106.70 கோடியாகவும் இருந்தது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1038.63 கோடியாகும். 1996–97 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.11,760.33கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.13,047.20 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1,286.87 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இவ்வுயர்விற்கு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.195 கோடி கூடுதலாக செலவு செய்தது, அரசுப் பணியாளர்களுக்குக் கூடுதல் இடைக்கால நிவாரணத் தொகையைக் கொடுக்க ரூ.203 கோடி ஒதுக்கியது, பொங்கல் பண்டிகைக்கான கருணைத் தொகை மற்றும் ஊதியக் கொடையை அதிகமாகக் கொடுத்த வகையில் ரூ.40 கோடி செலவிட்டது ஆகியவைகளே முக்கிய காரணங்களாகும்.

147. 1996–97 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த பற்றாக்குறை ரூ.334.89 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால் 1996–97 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ.156.22 கோடியாக குறைந்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்ட அளவைவிட நிகரக் கடன் வரவுகள் அதிகமானதும், மூலதனச் செலவு குறைந்ததும் இதற்கு காரணமாகும்.

148. 1997–98 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.12,641.05 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.14,377.62 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1,736.57 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1997–98 ஆம் ஆண்டு வரவு செலவுத்

திட்டத்தில் ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசுப் பணியாளர்களின் சம்பள உயர்விற்காகவும், உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காகவும், ஓய்வூதியத் தொகை கொடுக்கும் வகையிலும் கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதே இவ்வுயர்விற்குக் காரணங்களாகும்.

149. 1997–98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் அனைத்துக் கணக்குகளில் நிகரப் பற்றாக்குறை, ரூ.498.38 கோடியாக அதிகரித்துள்ளது.

150. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, வெகுவாக அதிகரித்து உள்ளது. மாநிலத்தின் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த இதனைக் குறைப்பது அவசியம். இந்தப் பற்றாக்குறையை ஓரளவிற்குக் குறைக்கத் தக்க வரி விதிப்பு மற்றும் செலவு நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

## முத்திரைத் தாள்களும் பத்திரப் பதிவும்

151. நூற்று முப்பது ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த பதிவுத் துறை மக்களுக்கு ஆற்றும் பணியினை மேம்படுத்தவும், வரி ஏய்ப்பினைக் குறைக்கவும் வழிவகை செய்ய நிர்வாக மாற்றங்களும் சட்டத் திருத்தங்களும் கொண்டு வரப்படும். அரசு நடவடிக்கை எடுக்கும். இத்துறையில் கணிப்பொறிகளை பயன்படுத்தி, மக்களுக்கு வசதிகளை அதிகரிக்க வரும் நிதி ஆண்டில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

152. மற்ற மாநிலங்களில் தமிழகத்திலுள்ள சொத்துக்களைப் பதிவு செய்வதன் மூலம் ஏற்படும் வரி இழப்பினைத் தவிர்க்க பத்திரப்பதிவுச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

153. முத்திரை வரி 13 சதவீதத்திலிருந்து 0.1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால், வீட்டு வசதி நிதி நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி வீடு கட்டுபவர்களுக்கு கடன் வசதி அளிக்க இயலும்.

## மோட்டார் வாகன வரி

154. இந்தியாவில் தயாராகும் எடை குறைவான வாகனங்களுக்கு (Light Motor Vehicles) விதிக்கப்படும் மோட்டார் வாகன வரி 1.4.1994லிருந்து உயர்த்தப்பட்டது. இந்த வாகனங்களுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப்படும்.

| சுமையில்லாத எடை | இந்தியாவில் தயாராகும் வாகனங்கள் ஆண்டு வரி | | | |
|---|---|---|---|---|
| | தனிப்பட்டோர் | | மற்றவை | |
| | தற்போதைய | மாற்றப்பட்ட | தற்போதைய | மாற்றப்பட்ட |
| | | | (ரூபாய்) | |
| அ) 700 கிலோ வரை எடை | 500 | 600 | 1000 | 1200 |
| ஆ) 701 கிலோவுக்கு மேல் 1500 கிலோ வரை எடை | 650 | 800 | 1300 | 1600 |
| இ) 1501 கிலோவுக்கு மேல் 2000 கிலோ வரை எடை | 750 | 1000 | 1500 | 2000 |
| ஈ) 2001 கிலோவுக்கு மேல் 3000 கிலோ வரை எடை | 800 | 1100 | 1600 | 2200 |
| உ) 3001 கிலோவுக்கு மேல் எடை | 900 | 1250 | 1800 | 2500 |

155. ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப்படும்.

| | ஆண்டு வரி | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றப்பட்ட வரி |
| | (ரூபாய்) | |
| அ) ஆட்டோ ரிக்ஷா | 240 | 280 |
| ஆ) சாதாரண வாடகைச் சிருந்து | 600 | 700 |
| இ) சுற்றுலாப் பயணிகள் வாடகைச் சிருந்து | 800 | 1000 |

ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு கடைசியாக மோட்டார் வாகன வரி 1983ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது.

156. மோட்டார் வாகனவரி செலுத்தும்போது சந்திக்கின்ற இடர்ப்பாடுகளையும் அல்லல்களையும் கருத்தில் கொண்டு, வரி செலுத்துவதற்காக வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியதின் அவசியத்தை குறைக்க வேண்டுமென்று பரிந்துரைகள் வந்துள்ளன. இதைக் கருத்தில் கொண்டு ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் மோட்டார் வாகன வரி உரிமக் கட்டணத்தோடு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதிய ஆட்டோ ரிக்ஷாக்கள், சாதாரண வாடகைச் சிருந்துகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வாடகைச் சிருந்துகள் போன்ற வாகனங்கள் உரிமம் பெறும்போது உரிம காலமான ஐந்தாண்டுக்கான மோட்டார் வாகன வரி செலுத்தவேண்டும். கட்டவேண்டிய ஐந்தாண்டு கால வரி ஆட்டோ ரிக்ஷாவிற்கு ரூபாய் 1400, சாதாரண சிருந்திற்கு ரூபாய் 3500, சுற்றுலா பயணிகள் வாடகைச் சிருந்திற்கு ரூபாய் 5000 ஆகும். தற்போதுள்ள உரிமதாரர்கள் உரிமம் புதுப்பிக்கும் வரையில் இவ்வரியை

ஆண்டுதோறும் செலுத்த வேண்டும். உரிமம் புதுப்பிக்கப்படும்போது உரிமக் காலத்திற்கான வரியை உரிமக் கட்டணத்தோடு செலுத்தப்பட வேண்டும். இதன் மூலம் உரிமம் பெறுபவர்கள் உரிமக் காலத்தின்போது மோட்டார் வாகன வரி செலுத்துவதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செல்ல வேண்டிய அவசியம் இராது.

157. மோட்டார் சைக்கிள்களுக்கு விதிக்கப்படும் ஆண்டு வரி பின்வருமாறு மாற்றி அமைக்கப்படும்:-

| மோட்டார் சைக்கிள் | ஆண்டு வரி | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றப்பட்ட வரி |
| | (ரூபாயில்) | |
| 50 சி.சி. வரை | விலக்கப்பட்டது | |
| 51 முதல் 75 சி.சி.வரை | 125 | 135 |
| 76 முதல் 170 சி.சி.வரை | 180 | 200 |
| 170 சி.சி.க்கு மேல் | 210 | 240 |

மோட்டார் சைக்கிள்களுக்கான ஆயுட்கால வரி இதே விகிதாசாரத்தில் மாற்றியமைக்கப்படும்.

158. மாற்றியமைக்கப்பட்ட மோட்டார் வாகன வரி விகிதங்கள் 1.4.1997 முதல் அமலுக்கு வரும்.

## விற்பனை வரி

159. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சியும் வணிகமும் தழைத்தோங்க, நிலையான, குழப்பமற்ற,

நேயமான ஒரு சூழ்நிலை உருவாக்குவதற்கு ஒரு தொலைநோக்கு வரிக்கொள்கையை அறிவித்தேன். அதன்படி வணிகவரி அமைப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பல இனங்களில் வரிகள் குறைக்கப்பட்டன. இவற்றை வணிக சமுதாயமும் தொழில் முனைவோரும் வரவேற்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து வணிக வரிகளில் மேலும் தேவையான மாற்றங்களை அரசுக்குப் பரிந்துரைக்க திரு தங்கராசு, இ.ஆ.ப.(ஓய்வு) தலைமையில் நியமிக்கப்பட்ட விற்பனைவரிச் சீரமைப்புக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து, விற்பனைவரி விதிப்பில் பின்வரும் மாற்றங்களைச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நமது மாநிலத்தில் வேளாண்மை, தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும் என்று நம்புகிறேன்.

*160.* விவசாயிகள் பயன்படுத்தும் யூரியா உரத்துக்கு விற்பனைவரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக்கப்படும். இதன்மூலம் அண்மையில் மத்திய அரசு அறிவித்த கூடுதல் விலை அதிகரிப்பு ஓரளவு குறைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பெறுவர். மேலும் சொட்டுநீர் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கு வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்படும். மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படும்.

161. மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், நிலக்கடலைத் தோல், சீயக்காய்பொடி, தொன்னை, சாம்பிராணி, சம்மட்டி, கடல்சிப்பி மற்றும் சிப்பியினால் செய்யப்பட்ட பொருள்கள், தயிர், பஞ்சாமிர்தம், நாட்டு மருந்துகள் 39 மற்றும் புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர்காக்கும் மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலா கையேடு வரைபடங்கள், சூரிய ஒளி மின் கலங்கள் (Solar Cell), செங்கல் மற்றும் ஓடு செய்யப்பயன்படும் களிமண், அவுரி இலை மற்றும் காய், நிலவாகை செடி இலை, மரவள்ளிக் கிழங்கின் கப்பி மற்றும் திப்பி, பழைய வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூபாய் 50க்குக் குறைவான காலணிகள், தங்க நகைகள் செய்து ஏற்றுமதி செய்வோர்க்கு மத்திய அரசு நிறுவனமான எம்.எம்.டி.சி. விற்கும் தங்கம் ஆகிய இனங்களுக்கு 11 சதவீதம், 8 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 2 சதவீதம் என்று இருந்த வரிகள் ரத்து செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

162. கைப்பெட்டிகள், ஆயில் இஞ்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி போன்ற அறைக்கலன்கள், வணிகர் சின்னம் உள்ள **(Branded)** வெண்ணை, நெய் ஆகியவற்றிற்கு வரி 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

163. தற்போது மூக்குக்கண்ணாடி மற்றும் தட்டச்சுப் பொறிகளுக்கு 20 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அது 8 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

164. காகிதப் பைகள், குடைகள், கைவினைப் பொருட்கள், 30 அடிசரக்குப் பொருட்கள் மற்றும் தார்ப்பாய் போன்ற இனங்களுக்கு விதிக்கப்படும் வரி 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

165. தமிழ் தட்டச்சுகளுக்கு வரி 20 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

166. கண்ணாடி மணிகள், கண்ணாடி கோலி குண்டுகள், கொசு விரட்டிகள் மற்றும் அழிப்பான்கள் அதற்கு பயன்படும் வில்லைகள் முதலியவற்றிற்கு வரி 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

167. வறுத்த வேர்க்கடலை, தலைக்கவசங்கள், தாவரக் கழிவுக் கட்டிகள், ஜல்லி, பொம்மைகள், மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள், **(Electronic parts and accessories)** மாணவர்கள் ஓவியத்திற்கு பயன்படுத்தும் எழுது பொருள்களுக்கு வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

168. வணிகச் சின்னம் இல்லாத காலணிகள், செப்பு, எவர்சில்வர் மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பாத்திரங்கள், சுவையூட்டப்பட்ட பால், கழிவுக் காகிதங்கள், கல்வி நிலையங்களுக்கு விற்கப்படும் விஞ்ஞானக் கருவிகள், தையல் மற்றும் சித்திர தையல் இயந்திர பாகங்கள் மற்றும் அதன் ஊசிகள் ஆகியவற்றிற்கு வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகின்றது.

*169.* மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. அதேசமயம் மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரைகளுக்கு 2 சதவீதம் வரி விதிக்கப்படும். இதனால் நம்மாநிலத்தின் தொழில் வளர வாய்ப்பு ஏற்படும்.

170. பனியன் உள்ளிட்ட பின்னலாடைகளுக்கு வரி 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

171. வணிக வரி சீரமைப்புக் குழு தற்போது சில பொருட்களில் பரவலாக உள்ள வரி ஏய்ப்பினைக் குறைக்கவும் நமது மாநிலத்திற்குள் விற்பனையைப் பெருக்கவும் வரி வீதங்களில் சில மாறுதல்களை பரிந்துரைத்துள்ளது. அவற்றின் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

* பருத்திக்குக் கொள்முதல் வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

* சரிகைக்கு விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

* செயற்கை இழை, நூல் மற்றும் செயற்கை இழைகளுக்கு பிற மாநில முகவர்களுக்கு கிளை மாற்றமாகவோ அல்லது முகவர் விற்பனையாகவோ செய்யக் கூடாது என்ற நிபந்தனை பேரில் விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக குறைக்கப்படும்.

* தங்கம், வெள்ளி நகைகள் போன்றவைகளுக்கு வரி பின்வரும் படிமுறை (**Slab system**) வீதத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் பின்வருமாறு விதிக்கப்படும்.

1. ஆண்டுக்கு மொத்த விற்பனைத் தொகை ரூ3 இலட்சத்துக்கு மேலும் ரூ.5 இலட்சத்துக்கு குறைவாகவும். — ரூ.500/-

| | | |
|---|---|---|
| 2. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.5 இலட்சத்துக்கு மேலும் ரூ.10 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.1000/- |
| 3. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.10 இலட்சத்துக்கு மேலும் ரூ.20 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.2000/- |
| 4. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.20 இலட்சத்துக்கு மேலும் ரூ.30 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.4000)- |
| 5. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.30 இலட்சத்துக்கு மேலும் ரூ.40 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.6000/- |
| 6. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.40 இலட்சத்துக்கு மேலும் ரூ.50 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.7000/- |
| 7. | மொத்த விற்பனைத் தொகை ரூ.50 இலட்சத்துக்கு மேல். | நடைமுறையில் உள்ள வரிவீதம் பொருந்தும். |

* விண்மீன் குறியிட்ட இந்த வரிக்குறைப்பு முடிவுகள், குழு பரிந்துரை செய்தவாறு ஆறு மாதத்திற்குப் பின் பரிசீலிக்கப்பட்டு எதிர்பார்த்த கூடுதல் வரி வசூல் கிடைக்கவில்லை என்றால் இந்த முடிவுகளில் தக்க மாற்றம் செய்யப்படும்.

172. உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு விற்பனை வரி சில ஆண்டுகளுக்கு முன்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. வணிகவரி சீர்திருத்தக் குழு படிமுறை வீதத்தில் வரி விதிக்கப் பரிந்துரைத்துள்ளது. இந்த வரி விதிப்பால் உணவு விடுதிகளில் உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடாது

என்ற கருத்தினை கொண்டு குழு பரிந்துரைத்ததை விட குறைந்த விகிதத்தில் பின்வருமாறு படிமுறை வீதத்தில் வரி விதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை<br>ரூ.25 இலட்சம் வரை | – வரியில்லை |
| 2. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை<br>ரூ.25 இலட்சத்துக்கு மேலும்<br>ரூ.30 இலட்சத்துக்குக் குறைவாகவும் | ரூ.2000/–<br>மாதம் ஒன்றுக்கு |
| 3. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை<br>ரூ.30 இலட்சத்துக்கு மேலும்<br>ரூ.40 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.3000/–<br>மாதம் ஒன்றுக்கு |
| 4. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை<br>ரூ.40 இலட்சத்துக்கு மேலும்<br>ரூ.50 இலட்சத்துக்கு குறைவாகவும். | ரூ.4000/–<br>மாதம் ஒன்றுக்கு |
| 5. | ஆண்டு மொத்த விற்பனைத் தொகை<br>ரூ.50 இலட்சத்துக்கு மேற்படின். | 2 சதவீதம் வரி |

173. பான்மசாலாவுக்கு விற்பனை வரி 11 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது.

174. பரிசுச் சீட்டு விற்பனை மீது தற்பொழுது நடைமுறையில் உள்ள இணக்க வரி விதிப்பின் வீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப் படுகிறது.

| | தற்போதைய வரி | மாற்றியமைக்கப்பட்ட வரி |
|---|---|---|
| வாராந்திர குலுக்கல் | ரூ.6,000/– | ரூ.10,000/– |
| மாதமிரு முறை குலுக்கல் | இணக்க வரி முறை இல்லை | ரூ.15,000/– |
| மாதாந்திர குலுக்கல் | ரூ.15,000/– | ரூ.25,000/– |
| மாதாந்திர சிறப்பு குலுக்கல் | ரூ.15,000/– | ரூ.40,000/– |
| விழாக்கால சிறப்பு குலுக்கல் | ரூ.20,000/– | ரூ.60,000/– |

175. விற்பனை வரி சீர்திருத்தக்குழு அளித்துள்ள பரிந்துரைகளில் நமது நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு பகுதி தான் தற்போது ஏற்றுக் கொள்ள இயலும். இவற்றைச் செயல்படுத்துவதினால் ஏற்படும் விளைவுகள், அரசுக்குக் கிடைக்கும் வருவாய் போன்றவைகளைப் பரிசீலித்து மீதமுள்ள பரிந்துரைகளை செயல்படுத்துவது பற்றி அடுத்த நிதியாண்டில் முடிவெடுக்கப்படும்.

## மதிப்புக் கூட்டுவரி

176. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மறு விற்பனையாளர்களுக்கு மதிப்புக் கூட்டுவரி முறையை செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. பின்னர், வணிகர்களின் கோரிக்கையை ஏற்று மறு பரிசீலனை செய்யும் வரை இந்த வரி விதிப்பு முறையை அமுல்படுத்துவது ஒத்திவைக்கப்பட்டது. விற்பனை வரி சீரமைப்புக் குழு இம்முறையைச் செயல்படுத்தும் முன் வணிகர்களுக்கு இது பற்றி நன்கு விளக்கிக் கூறுவதும், வணிகவரி அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது. இதன்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர் மதிப்புக் கூட்டுவரி விதிப்பது பற்றி தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

## சோதனைச் சாவடிகள்

177. மாநிலத்தின் எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளைத் தவிர மாநிலத்திற்குள் உள்ள பிற தேவையற்ற சோதனைச் சாவடிகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக சுழற்படைகளை அமைக்க குழு பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையை ஏற்று படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

178. வணிகவரித் துறையின் செயல்பாட்டை மேம்படுத்தவும், சோதனைச் சாவடிகளில் உள்ள நடைமுறை சிக்கல்களை களைந்து நிர்வாக முறையை எளிமையாக்கவும், வரி ஏய்ப்பினை உடனுக்குடன் கண்டுபிடிக்கும் வகையில் புலன் ஆய்வு மேற்கொள்ளவும், கணிப்பொறி மயமாக்கவும் ஒரு திட்டத்தை அரசு விரைவில் செயல்படுத்த உள்ளது. இதற்காக 1997–98ல் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

179. விற்பனை வரி சீரமைப்புக் குழு விற்பனை வரி விதிப்பு முறையை (Procedure) எளிமையாக்குவது தொடர்பாக பரிந்துரைகள் செய்துள்ளது. இவை பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள் வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்படும்.

## கேபிள் டி.வி.

180. கேபிள் டி.வி.க்கான கேளிக்கை வரி தற்போது மொத்த வசூலில் 20 சதவீதமாக உள்ளது. இனி சந்தாதாரர் ஒருவருக்கு மாதம் ரூபாய் 20 என்று மாற்றியமைக்கப்படும். தற்போது கேபிள் டி.வி. உரிமத்தில் உள்ள 100 சந்தாதாரர் என்ற வரம்பு 500 ஆக உயர்த்தப்படும்.

## ஆயத் தீர்வை

181. மது வகையறாக்கள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை 1994ஆம் ஆண்டிலிருந்து மாற்றப்படாமல் உள்ளது. இந்த நிதி நிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள விற்பனை வரிச்சலுகைகளால் ஏற்படும் நிதி இழப்புக்கு ஈடுகட்டவும் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான கூடுதல் நிதி ஒதுக்கவும் மது இனங்கள் மீது உள்ள ஆயத்தீர்வையை புருப் லிட்டர் (Proof litre) ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது பெட்டி (Case) ஒன்றுக்கு ரூ.95 ஆக உள்ள விற்பனைக் கட்டணம் (Vend Fee) ரூ.165 ஆக உயர்த்தப்படும். இவற்றின் மூலம் ரூ.210 கோடி கூடுதல் வருவாய் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

182. இந்த வரவு-செலவுத் திட்டத்திலும், இதற்கு முன்பும் அறிவிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளும், வேலைவாய்ப்புப் பணிகளும், நல்வாழ்வுத் திட்டங்களும், மற்றும் மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெற்று வரும் அனைத்து அமைச்சகங்களின் எல்லா பணிகளும் திட்டமிட்டபடியும் அறிவித்தபடியும் நடைபெறுகிறதா என்பதை கவனித்திட ஆற்றல் மிகு அதிகாரிகளைக் கொண்ட "வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு" ஒன்று (Cell for Monitoring Development Programmes) முதலமைச்சர் அலுவலகத்தில் அமைக்கப்படும். ஒவ்வொரு அமைச்சரும் மாதந்தோறும் தம் துறையின் திட்டங்களையும் அவற்றின்

செயல்பாடுகளையும் துறை அதிகாரிகளுடன் அமர்ந்து விவாதித்து அதன் விபரங்களை இந்தக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

183. இதன் மூலம் மக்களுக்கான பணிகளின் பயன்கள் திட்டமிட்டபடி காலதாமதமின்றி உரிய நேரத்தில் மக்களைச் சென்றடைவது விரைவுபடுத்தப்படும் - உறுதி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் நாங்கள் சொல்வதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம்.

*184. இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கும் பணியில் என்னுடன் இணைந்து நின்று கருத்தறிவித்தும் கண் விழித்து ஒத்துழைத்தும் உதவிய அரசுத் துறை அலுவல் ஆர்வலர்களுக்கும் – குறிப்பாக நிதித் துறை செயலாளர் திரு ராஜாராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் என் இதய நன்றியை உரித்தாக்குகிறேன்.*

*185. பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில் சோழ சாம்ராஜ்யத்தின் புலிக் கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்ற கிராமத்தில் வேளாண் தொழில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ் மொழிப்பற்றும் மிகக் கொண்டு தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன்பிறப்பாகவும் என்னை ஆக்கிக் கொண்டுள்ள இந்த அறுபதாண்டு காலப் பொது வாழ்வில் எழுபத்தி மூன்று வயதுடைய நான் "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற சூளுரையுடனும், கடலில் தூக்கி எறிந்தாலும் தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டுமரமாக மிதப்பேன் என்ற கடமை உணர்வுடனும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே அல்லும் பகலும் நினைவிற் கொண்டு – அவர்களின் அணி வகுப்பில் ஒரு சிப்பாயாகப் பணியாற்றும் பேறு பெற்று, அவர்களின் உயர்வுக்கும் உரிமைக்கும் வழிவகுக்கும் ஆற்றலும் அக்கறையும் உள்ளவர்கள் முன்னேறிய பிரிவினரில் இருப்பின் அவர்களையும் அடையாளம் கண்டு அரவணைத்து அவர்தம் துணையுடன் ஒடுக்கப்பட்டோர் உன்னத வாழ்வுக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்*

எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற என் ஏக்கத்தை, தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அக்கனவை நனவாக்க வேண்டுமென்பதற்காகவும், என் காலத்தில் அமைதியானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந்தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாகத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதி நிலை அறிக்கை. இதனை நாட்டு மக்களும், கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் விமர்சிக்கும்போது,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எனும் குறளுக்கேற்ப வரவேற்று மகிழ்ந்து, குறை திருத்தி, நிறை தோன்ற பாடுபடுவேன் என்று உறுதி கூறி இந்த நிதி நிலை அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

**வணக்கம்**

**மு. கருணாநிதி,**
**முதலமைச்சர்.**

சென்னை
*1997 ஆம் ஆண்டு*
*மார்ச்சுத் திங்கள் 5 ஆம் நாள்,*
*திருவள்ளுவர் ஆண்டு 2028.*
*மாசித் திங்கள் 22 ஆம் நாள்.*